அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

# 2021/2022

# தமிழ்

## ஆண்டு 11

மாதிரித் தேர்வுத்தாள்

| | |
|---|---|
| **நேரம்:** 150 மணித்துளிகள்<br><br>**நாள்:** சனிக்கிழமை | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)<br><br>**பக்கங்கள்:** 16 |
| **பெயர்:** | |
| **தமிழ்ப்பள்ளி:** | |

மாதிரித் தேர்வுக்கான

## பகுதி 1- எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. முதலெழுத்துகளின் எண்ணிக்கை
   1. முப்பது
   2. பதினெட்டு
   3. இருநூற்றுப்பதினாறு
   4. நூறு
2. திராவிட மொழிக்குடும்பம் உருவாக அடித்தளமாக அமைந்த மொழி
   1. தெலுங்கு
   2. கன்னடம்
   3. மலையாளம்
   4. தமிழ்
3. மகளிர் முல்லைப் பூக்களைத் தலையில் சூடினர். இதில் அடைமொழி ஏற்ற சொல்லிய உறுப்பு
   1. எழுவாய்
   2. பயனிலை
   3. செயப்படுபொருள்
   4. அடைமொழி இல்லை
4. பகுதி, விகுதி என்னும் இரு உறுப்புகள் மட்டும் கொண்ட பகுசொல்
   1. படித்தான்
   2. உண்ட
   3. கூனி
   4. நிலம்
5. புலவரின் உவமைகள் செய்யுளுக்கு அணி சேர்த்தன. இதில் அணி என்பதன் பொருள்
   1. செய்யுள்
   2. அழகு
   3. உவமை
   4. சொல்
6. 'தமிழர் தோன்றிய இடம் குமரிக்கண்டம்' என நிறுவியவர்
   1. மறைமலையடிகள்
   2. தேவநேயப் பாவாணர்
   3. கணியன் பூங்குன்றனார்
   4. தொல்காப்பியர்
7. செய்யுளின் அடிகளிலோ சீர்களிலோ முதலாம் எழுத்து ஒன்றி வருவது
   1. எதுகை
   2. சிலேடை
   3. உருவகம்
   4. மோனை
8. நீர்ப்பறவைகளுள் ஒன்று
   1. மயில்
   2. அன்னம்
   3. சேவல்
   4. செண்பகம்
9. குறவனுக்கு குறத்தி போல பாணனுக்கு
   1. பாணினி
   2. பாடகி
   3. பாடினி
   4. பாங்கி

மாதிரித் தேர்வுத்தாள்

1 2 3 4

10. உயர்திணை, பலர்பால், படர்க்கை, இறந்தகாலம் உணர்த்தும் சொல்
    1. எழுதினர்
    2. ஓடின
    3. பாடுகிறார்கள்
    4. சிரித்தீர்கள்

11. தமிழாசிரியர் என்பதன் சொற்பிரிப்பு வடிவம்
    1. தமிழாசு + இயர்
    2. தமிழின் + ஆசிரியர்
    3. தமிழா + ஆசிரியர்
    4. தமிழ் + ஆசிரியர்

12. தொல்லியலாளர்கள் அகழாய்வுகளில் ஈடுபட்டனர். இச்சொல்லியம்
    1. வினா
    2. மெய்ப்பாடு
    3. கூற்று
    4. ஏவல்

13. உயிர்த்தொடர்க்குற்றியலுகரப் புணர்ச்சி பெற்று வந்த சொல்
    1. அழகியல்
    2. பட்டாடை
    3. வண்டினம்
    4. காதணி

14. பாலை நிலத்துக்குரிய அகத்திணை ஒழுக்கம்
    1. இருத்தல்
    2. இரங்கல்
    3. பிரிதல்
    4. புணர்தல்

15. செம்மை + கோல் என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. செங்கோல்
    2. செம்மைக்கோல்
    3. செம்மைகோல்
    4. செங்கைக்கோல்

16. புலம்பெயர் தமிழர் தாம் வாழும் நாடுகளில் சீருஞ்சிறப்புமாக வாழ்கின்றனர். இதில் சீருஞ்சிறப்பும் என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. அடுக்கிடுக்குத்தொடர்
    3. இணைமொழி
    4. இரட்டைக்கிளவி

17. திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் சிறந்தவராகப் போற்றப்படுபவர்
    1. நச்சினார்க்கினியர்
    2. இளம்பூரனார்
    3. சேனாவரையர்
    4. பரிமேலழகர்

1 2 3 4

18. “தீதும் நன்றும் பிறர் தர வாரா” எனக் கணியன் பூங்குன்றனார் கூறியுள்ளார். இச்சொல்லியம்
   1. கலப்புச்சொல்லியம்
   2. தனிச்சொல்லியம்
   3. தொடர்சொல்லியம்
   4. வியங்கோள் சொல்லியம்

19. நாயக்கர் காலத்தில் ஆசுகவி, வசைக்கவி எனும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டவர்
   1. காளமேகப்புலவர்
   2. சின்னத்தம்பிப்புலவர்
   3. ஒட்டக்கூத்தர்
   4. சோமசுந்தரப்புலவர்

20. தமிழின் தொன்மையை முதலில் உலகிற்கு அறிவித்தவர்
   1. பரிதிமாற் கலைஞர்
   2. கால்டுவெல்
   3. யோன் பெசுகி
   4. தேவநேயப்பாவாணர்

21. கொடுங்கோல் ஆட்சி ஒழிக! இச்சொல்லியத்தின் பொருள்
   1. விதித்தல்
   2. வேண்டுதல்
   3. வைதல்
   4. வாழ்த்துதல்

22. இலக்கிய வளர்ச்சியின் பொற்காலமாகத் தமிழிலக்கியங்கள் போற்றி வளர்க்கப்பெற்ற காலம்
   1. நாயக்கர் காலம்
   2. சோழர் காலம்
   3. பல்லவர் காலம்
   4. ஐரோப்பியர் காலம்

23. ‘அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்திக் குறுகத்தரித்த குறள்’ எனத் திருக்குறளைப் போற்றியவர்
   1. இடைக்காட்டுச் சித்தர்
   2. ஔவையார்
   3. திருமூலர்
   4. பாரதியார்

24. துட்டர் தமை அழிக்க சூளுரைத்து நாமெழுவோம். இதில் சூளுரைத்தல் என்பதன் பொருள்
   1. பெருமை பேசுதல்
   2. உறுதிகொள்ளுதல்
   3. பொய் பேசுதல்
   4. சுரண்டுதல்

25. கோவை, உலா, பரணி போன்றன
   1. சிற்றிலக்கியங்கள்
   2. பேரிலக்கியங்கள்
   3. சங்க இலக்கியங்கள்
   4. பக்தி இலக்கியங்கள்

(25X1=25 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**2. கீழ்க்காணும் வினாக்களுள் நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழ்மொழியின் சிறப்புகளுள் இரண்டு எழுதுக.

2. இலக்கியங்கள் எவற்றை வெளிப்படுத்துகின்றன?

3. 'சொல்லுக சொல்லை பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும் சொல்இன்மை அறிந்து' – என்னும் திருக்குறள் உணர்த்தும் கருத்து யாது?

4. இசுலாமிய இலக்கியங்கள் தோற்றம் பெற்ற காலப்பகுதி எது?

5. உயிரளபெடை, ஒற்றளபெடை - ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

6. "எமக்கான விடுதலையை நாமே வென்றெடுப்போம்" என கவிஞர் இரத்தினதுரை தனது கவிதை வரிகளில் பாடியுள்ளார். இதில் வந்துள்ள தலைமைத்தொடர், சார்புத்தொடர் என்பவற்றை எழுதுக.

7. எதிரியின் பிடியில் சிக்கிய பொதுமக்கள் தூண்டிற் புழுவினைப் போல் துடித்தனர். இதில் வந்துள்ள உவமையணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றை எழுதுக.

(5×2=10 புள்ளிகள்)



மாதிரித் தேர்வுத்தாள்

**3. கீழ்க்காணும் பாடலைப் படித்து, அதன் பொருளுரையை எழுதுக.**

நிலந்தொட்டுப் புகாஅர் வானம் ஏறார்
விலங்கிரு முந்நீர் காலில் செல்லார்
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடி முறை தேரின்
கெடுநரும் உளரோ நம் காதலோரே?

\- குறுந்தொகை

(3 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் படத்தினை அல்லது தலைப்பினைத் தெரிவுசெய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. இயற்கை
2. 

(4 புள்ளிகள்)

மாதிரித் தொகுத்தாள்

**5. கீழ்க்காணும் பந்தியைப் படித்து மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

தமிழர், மாந்த வரலாற்றில் முந்தித் தோன்றிய இனத்தவர் ஆதலால், அவர் வாயில் குழந்தைகளும் முதியவரும் களைத்து வரும் நோயாளிகளும்கூட எளிதாக ஒலிக்கத் தக்கனவும், பெரும்பாலும் எல்லா மொழிகட்கும் பொதுவானவுமான உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாக முப்பது எழுத்தொலிகளே பிறந்திருந்தன. அத்தோடு, தனி மெய்யொலியில் தொடங்கும் சொற்களும், வல்லின மெய்யொலியில் முடியும் சொற்களும், சில மெய்யொலிகட்குப் பின் சில மெய்யொலிகள் தனித்தோ உயிர்மெய்யாகவோ இடையில் வருஞ் சொற்களும், அவர் வாயில் வந்ததில்லை. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்னும் முறையில், அக்காலத்தில் வரையறுக்கப்பட்ட முதல், இடை, கடை எழுத்து வரம்புகளையே, இக்காலத்து இலக்கண நூல்களும் ஏற்றுக் கூறுகின்றன. இங்ஙனம் தமிழ் பெரும்பாலும் மெல்லோசை மொழியாக இருப்பதனாலேயே, அது உலக முதன்மொழியாகத் தோன்றியும் இன்னும் இளமை நிலையில் இருந்தும் வருகின்றது. அதைத் தாய்மொழியாகக் கொண்டவரும் முயற்சி வருத்தமின்றி எளிதாகப் பேசி வருகின்றனர்.

(4 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் பந்தியை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**வாடிக்கையாளருக்கு ஓர் அறிவித்தல்!**

நத்தார் விழாவினை முன்னிட்டு எமது வாடிக்கையாளருக்கு ஆண்டுதோறும் டிசம்பர் 23ஆம் நாள் எமது வணிக நிலையத்தில் பரிசுப்பொதிகள் வழங்கப்படுவது வழக்கம். இவ்வாண்டு நோய்த்தொற்றுச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு எமது வழக்கத்தை மாற்றியுள்ளோம். ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் எமது வணிக நிலையத்திற்கு வருவதைத் தவிர்ப்பதற்காக மாற்றுத் திட்டமொன்றினை நாம் உங்களுக்கு முன்வைக்கின்றோம். இவ்வாண்டு உங்களுக்கான பரிசுப்பொதிகள் உங்கள் வீடு தேடி வரும். நாம் அவற்றை உங்களுக்காக அனுப்பி வைப்போம். இதுவரை வாடிக்கையாளர் அட்டை பெற்றுக்கொள்ளாதவர்கள் எமது இணையத்தளத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தினை நிரப்பி மின்னஞ்சல் ஊடாக அனுப்புங்கள். வாடிக்கையாளர் அட்டையிலுள்ள முகவரி மாற்றமடைந்திருப்பின் அவர்களும் விபரங்களைப் புதுப்பிக்கவும். உங்கள் ஒத்துழைப்பிற்கு மிக்க நன்றி.

"அனைவருக்கும் எமது இனிய நத்தார் விழா வாழ்த்துகள்"

(4 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

**7. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப் பற்றி 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. இன்றைய உலகில் விளம்பரங்களின் பங்கு

   உள்ளடக்கக் குறிப்புகள்:
   - விரைவான உற்பத்தி
   - சந்தைப்படுத்தலில் வேகம்
   - வருமானம் ஈட்டுதல்
2. தமிழிலக்கியங்களின் செழுமை
3. 'உழைப்பே உயர்வு தரும்' எனும் தலைப்பில் சிறுகதை

(15 புள்ளிகள்)

மாதிரித் தேர்வுத்தாள்

மாதிரிக் கேள்வித்தாள்

## பகுதி – 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. கீழ்க்காணும் பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழில் காலத்தால் முந்திய இலக்கணநூலாகிய தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இந்நூல் இடைச்சங்க காலமாகிய கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் எழுதப்பட்டது. தொல்காப்பியரைத் தொடர்ந்து தமிழ்ச்சான்றோரில் முதன்மை பெறுபவர் திருவள்ளுவர். இவர் முதற்பாவலர் என்றும் போற்றப்படுகிறார். இவர் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பிரிவுகளில் 1330 ஈரடிச் செய்யுள்களைப் பாடியுள்ளார். திருக்குறள், பதினெண்கீழ்க்கணக்கு என்னும் சங்கமருவியகால இலக்கிய வகைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேர இளவரசனான இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை பாடியுள்ளார். இந்நூலானது தமிழரது கலைகளான தமிழிசை, நடனம் என்பவற்றின் நுணுக்கங்களையும் குமுக வாழ்வியலையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறியுள்ளது. ஔவைப்பாட்டி என்று அழைக்கப்படும் தமிழ் மூதாட்டியார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை போன்ற வாழ்க்கைக்கு வழிகாட்டும் அறிவுரைகளைக் கூறும் நீதிநூல்களை இவ்வுலகிற்குத் தந்துள்ளார்.

1. தமிழ் நூல்கள் மூன்று எழுதுக.

______________________________

2. தமிழிலக்கணத்தைப் பற்றி அறியக்கூடிய நூல் எது?

______________________________

3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று எழுதுக.

______________________________

4. தமிழரது தொன்மையான கலைகள், வாழ்வியல் பற்றி அறியத் தந்தவர் யார்?

______________________________

5. மாந்த வாழ்வியலுக்கு வழிகாட்டும் நீதிநூல்கள் மூன்று எழுதுக.

______________________________

6. திருக்குறளின் பிரிவுகள் எவை?

______________________________

7. தமிழரது கலைகளை எடுத்துக் கூறியுள்ள நூல் எது?

______________________________

(7×1=7 புள்ளிகள்)

மாஸிந் தேர்வுகள்

**2. கீழ்க்கண்ட உரைப்பகுதிகளைப் படித்து, அவற்றிற்குப் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து கோட்டில் எழுதுக.**
**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- சமையல் வழிகாட்டிநூல்
- ஐரோப்பியச் சுற்றுப்பயணம்
- மாறிவரும் வாழ்க்கைமுறை
- விழிப்புணர்வு

அ. ______________________________

ஐரோப்பிய நாட்டவர்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் அந்நாடுகளின் காலநிலைக்கேற்றவாறே அமைந்துள்ளன. வேறு கண்டங்களிலிருந்து இங்கு வந்து வாழும் மக்கள் தத்தம் உணவுப்பழக்கவழக்கங்களையே தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். இதனால், வெவ்வேறு வகையான உணவுப்பொருட்களின் இறக்குமதிகளும் அதிகரிக்கின்றன. மக்கள் முடிந்தளவு உள்நாட்டு உற்பத்திப் பொருட்களைப் பயன்படுத்தும்படி அரசினால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஆ. ______________________________

ஐரோப்பிய சமையல் முறைகளை எளிதாகக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா? உங்கள் வீட்டில் நீங்களே சமைக்க விரும்புகிறீர்களா? இதோ! உங்கள் கைகளில் கிடைக்கிறது பொருத்தமான வழிகாட்டி நூல். குறைந்த நேரத்தில் சுவையான வித்தியாசமான சுவையனுபவத்தைப் பெற, விளக்கப்படங்களுடன் கூடிய இந்நூலை உடனே வாங்கிப் பயன் பெற்றுக்கொள்ளுங்கள்.

இ. ______________________________

ஐரோப்பிய நாடுகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி மக்களில் பலர் வீட்டில் சமைக்கின்றனர். சுவையான வேறுபட்ட உணவுகளை சமையல் வழிகாட்டி நூல்களிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர். உணவகங்களில் சென்று உணவருந்தும் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது. இடர்காலச் சூழலினால் ஏற்பட்ட பயணத்தடைகளும் இதற்கு ஒரு காரணமாக அமைகிறது என அறியமுடிகிறது.

ஈ. ______________________________

ஐரோப்பிய உணவுகளின் சுவைகளை அறிந்து கொள்ள அரிய வாய்ப்பு! எமது பயண வழிகாட்டி நிறுவனம் ஐரோப்பிய நாடுகளில் உள்ள சிறந்த உணவகங்களைத் தேர்ந்தெடுத்து உங்களை அங்கு அழைத்துச் செல்கிறது. நீங்கள் விரும்பும் உணவுகளை விரும்பியவாறு சமைத்துத் தருகின்றனர். வித்தியாசமான சுவையனுபவத்தைப் பெற உடனே விண்ணப்பியுங்கள்.

(4×2=8 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 03 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 04 | | | |
| 6 | 04 | | | |
| **7** | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 07 | | | |
| 2 | 08 | | | |
| | **மொத்தப் புள்ளிகள்** | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| **முதலாம் முறை** | | |
| **இரண்டாம் முறை** | | |
| **மேற்பார்வையாளர்** | | |

மாஜிதா தேர்வுத்தாள்